# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102129

1. District : மாவட்டம் Ranipet PS: காவல்நிலையம் VAC Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 3/23 Date: நாள் 22/12/23

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: Sec 7 & 12 of
(ii) Act சட்டம்: Act 1988 as amended by Sections பிரிவுகள்: PC (Amendment)
(iii) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: Act
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 21/12/23 Date to : நாள் வரை 22/12/23
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1930 hrs Time to : நேரம் வரை 0200 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22/12/23 Time : நேரம் 0700 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol – VII 21/12/23 & 22/12/23 Time : நேரம் 17.30 hrs. 07.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Tamil Type written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 34 Km North East
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி O/o the Asst. Executive Engineer Rural Development, Nemili Division Nemili
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. V. Saravanamuthu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Venkatachalam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Dy. Inspection cell Officer. (g) Address : முகவரி O/o Inspection cell, Vellore, Ranipet, Thirupathur & Tiruvannamalai District Vellore Collectorate Complex, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

– Seperate sheet enclosed –

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– No Delay –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 22/12/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station [signature] 22/12/23
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22/12/23 @ 09.30 hrs

Name: பெயர் S VIJAYALAKSHMI
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்
Vigilance & Anti Corruption
Ranipet Detachment

**SUBMITTED:**

| | | |
|---|---|---|
| எதிரிகள்: | | இன்று 22.12.2023 ஆம் தேதி காலை 07.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.V.சரவணமுத்து, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9 என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் V.சரவணமுத்து, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. அம்மையீர், பொருள்: இருதுறை திடீர் கூட்டு சோதனை - இராணிப்பேட்டை மாவட்டம் - ஊரக வளர்ச்சி நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இரு துறை திடீர் கூட்டு சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம், ஆவணங்கள் மற்றும் செயல்முறை -நடவடிக்கை எடுக்க கோரி ஒப்படைத்தல் - தொடர்பாக. நான் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள ஆய்வுக்குழு அலுவலகத்தில் துணை ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். நேற்று 21.12.2023 ஆம் தேதி பகல் சுமார் 14.30 மணிக்கு நான் என்னுடைய அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி தாலுக்கா கரியாக்குடல் கிராமத்தில் |
| 1) | திரு.V.அரிகிருஷ்ணன்,<br>உதவி செயற்பொறியாளர்,<br>ஊரக வளர்ச்சி,<br>நெமிலி உபகோட்டம்,<br>நெமிலி வட்டார வளர்ச்சி அலுவலகம்,<br>இராணிப்பேட்டை மாவட்டம். | |
| 2) | திருமதி.K.V.உமா (51/2023),<br>த/பெ வரதராஜன்,<br>க/பெ ஈஸ்வரன்,<br>இளநிலை வரைத்தொழில் அலுவலர்,<br>உதவி செயற்பொறியாளர் அலுவலகம்,<br>நெமிலி வட்டார வளர்ச்சி அலுவலக வளாகம், நெமிலி,<br>இராணிப்பேட்டை மாவட்டம். | |
| 3) | திரு.B.பழனி (48/2023)<br>த/பெ பங்காரு,<br>(திரு.அன்புமணி,<br>அரக்கோணம் ஊராட்சி<br>ஒன்றிய ஒப்பந்ததாரரின்<br>சப்-காண்டிராக்டர்),<br>எண்.126, குழாய் தெரு,<br>முள்வாய் கிராமம் மற்றும் அஞ்சல்,<br>அரக்கோணம் தாலுக்கா,<br>இராணிப்பேட்டை மாவட்டம். | |
| 4) | திரு.P.சற்குணம் (40/2023)<br>த/பெ பண்டரி,<br>(அரக்கோணம் ஊராட்சி<br>ஒன்றிய ஒப்பந்ததாரர்),<br>எண்.29, 3-வது தெரு,<br>சிவசக்தி நகர், | |

| | | |
|---|---|---|
| | அரக்கோணம் தாலுக்கா,<br>இராணிப்பேட்டை மாவட்டம்.<br><br>5) திரு.C.தயாளன் (57/2023)<br>த/பெ சின்னப்பா ரெட்டி,<br>(அரக்கோணம் ஊராட்சி<br>ஒன்றிய ஒப்பந்ததாரர்<br>திரு.கோகுல்ராவ் என்பவரின்<br>சப்-காண்டிராக்டர்),<br>விநாயகர் கோவில் தெரு,<br>வழி-ஞானமங்கலம்,<br>பெருங்களத்தூர்,<br>அரக்கோணம் தாலுக்கா,<br>இராணிப்பேட்டை மாவட்டம்<br><br>6) திரு.K.சிவராமன் (55/2023)<br>த/பெ கிருஷ்டப்பரெட்டி,<br>(சோளிங்கர் ஊராட்சி<br>ஒன்றிய ஒப்பந்ததாரர்<br>பூர்ணசந்திரன் என்பவரின்<br>சப்-காண்டிராக்டர்),<br>பஜனை கோவில் தெரு,<br>வெங்குப்பட்டு கிராமம்,<br>சோளிங்கர் தாலுக்கா,<br>இராணிப்பேட்டை மாவட்டம் | அமைந்துள்ள நெமிலி வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள ஊரக வளர்ச்சி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் ஒப்பந்தபணிகளை மேலளவீடு செய்து, அளவுப்புத்தகத்தை சரி பார்த்து கையொப்பமிட்டு சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்ப நெமிலி உபகோட்ட ஊரக வளர்ச்சி உதவி செயற்பொறியாளர் திரு.ஹரிகிருஷ்ணன் அவர்கள் தனக்கு கீழ் பணிபுரியும் உமா, JDO என்பவர் மூலமாக ஒப்பந்ததாரர்களை கட்டாயப்படுத்தி இலஞ்சமாக பணத்தை கேட்டு வசூல் செய்வதாக எனக்கு கிடைக்க பெற்ற நம்பகமான தகவலை நான் எனது தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.S.விஜயலட்சுமி ஆகிய தங்களுக்கு 17.30 மணிக்கு தகவல் தெரிவித்து, என்னுடைய தலைமையில், மாலை சுமார் 18.00 மணிக்கு அலுவலகத்தில் இருந்து காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் புறப்பட்டு, நெமிலி வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் உள்ள ஊரக வளர்ச்சி நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இரு துறை திடீர் சோதனை மேற்கொள்ள மாலை சுமார் 19.30 மணிக்கு சென்று சேர்ந்தோம். மேற்படி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தின் ஹாலில் இருந்து வெளியில் சென்ற ஒரு நபரிடம் நான் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, அவரை விசாரிக்க, அவர் தன் பெயர் பழனி என்றும், தான் காண்டிராக்டர் அன்புமணி என்பவரிடம் சப்-காண்டிராக்டராக வேலை செய்து வருவதாகவும் சொன்னவரிடம், உதவி செயற்பொறியாளர் அலவலகத்தில் இருதுறை |

திடீர் சோதனை செய்ய வந்திருப்பதாக கூறி அவரை அலுவலகத்திற்குள்ளே அழைத்து வரப்பட்டது. அந்த ஹாலில் இருந்த நபரிடம் அவரை பற்றி விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் சிவராமன் என்றும், தான் ஒரு காண்டிராக்டர் என்றும் சொன்னார். அவரையும், மேற்படி திரு.பழனி என்பவரையும் அழைத்துக்கொண்டு ஹாலின் இடது புற கேபினுக்குள் சென்றோம். அங்கு நான் என்னையும், குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டும், வந்த நோக்கத்தை தெரிவித்து, கேபினில் வடக்கு திசை நோக்கியவாறு இருந்த அலுவலக இருக்கையில் உட்கார்ந்திருந்த பெண்மணியிடம் விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் உமா என்றும், தான் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இளநிலை வரைத்தொழில் அலுவலராக கடந்த மூன்று வருடங்களாக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர், திருமதி.உமா அவர்களுக்கு அருகில் அமர்ந்து அலுவலக பணி செய்து கொண்டிருந்த பெண்ணை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் சௌந்தர்யா என்றும், தான் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் ரூ.7,000/- மாத சம்பளத்திற்கு தற்காலிகமாக பணிபுரிந்து வருவதாகவும், தனக்குண்டான சம்பளத்தை உதவி செயற்பொறியாளர் அவர்கள் கொடுத்து வருவதாகவும் சொன்னார். பின்னர், அந்த கேபினில் நின்று கொண்டிருந்த இரண்டு ஆண் நபர்களை விசாரிக்க, அதில் ஒருவர் தன்னுடைய பெயர் தயாளன் என்றும், தான் சோளிங்கர் ஒன்றியத்தில் ஒப்பந்த பணிகளை எடுத்து செய்யும் காண்டிராக்டர் கோகுல்ராவ் என்பவரிடம் சப்-காண்டிராக்டராக பணிபுரிந்து வருவதாகவும், மற்றொரு நபரை பற்றி விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் சற்குணம் என்றும், தான் அரக்கோணம் ஒன்றியத்தில் ஒப்பந்த பணிகளை எடுத்து செய்து வருவதாகவும் சொன்னார். பின்னர், திருமதி.உமா அவர்களிடம் உதவி செயற்பொறியாளர் திரு.ஹரிகிருஷ்ணன் அவர்கள் எங்கே சென்றுள்ளார் என விசாரிக்க, அவர் உதவி செயற்பொறியாளர் திரு.ஹரிகிருஷ்ணன் அவர்கள் செங்கல்பட்டில் உள்ள அவரது வீட்டிற்கு சுமார் 18.30 மணியளவில் புறப்பட்டு சென்றுவிட்டதாகவும், அவருக்கு செங்கல்பட்டிற்கு டிரான்ஸ்பர் ஆர்டர் வந்துள்ளதாகவும், இன்னும் நெமிலி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருந்து ரிலீவ் ஆகவில்லை என்று சொன்னார். மேலும், நெமிலி உபகோட்டத்தில் நெமிலி, அரக்கோணம், காவேரிப்பாக்கம் மற்றும் சோளிங்களர் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் திரு.ஹரிகிருஷ்ணன் அவர்கள்தான் உதவி செயற்பொறியாளர் என்றும், ரூ.2,00,000/- முதல் ரூ.10,00,000/- வரையிலான ஒப்பந்த பணிகளை திரு.ஹரிகிருஷ்ணன் அவர்கள்தான் மேலளவீடு செய்து, பட்டியலுக்கு மேலொப்பம் செய்து சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்புவார் என்று சொன்னார். பின்னர், திருமதி.உமா அவர்களிடம் உதவி செயற்பொறியாளர் அலுவலக அலுவலர்கள் யார் யார் இருக்கின்றீர்கள் என்று விசாரிக்க, அவர் தான் மட்டும்தான் உதவி செயற்பொறியாளர் அலுவலக அலுவலரென்றும், தன்னுடன் இருக்கும் சௌந்தர்யா என்பவர் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் மாத சம்பளத்திற்கு தற்காலிகமாக பணிபுரிந்து வருவதாகவும், மற்ற நபர்கள் அனைவரும் ஒப்பந்ததாரர்கள் என்றும் சொன்னார். பின்னர், ஊரக வளர்ச்சி நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர்

அலுவலகத்தில் ஆஜரில் இருந்த திருமதி.உமா, இளநிலை வரைத்தொழில் அலுவலர் அவர்களிடமும், மற்ற நபர்களிடமும் சோதனைக்கு சென்ற அலுவலர்களாகிய நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டும் எங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், ஹாலில் வடமேற்கு மூலையில் இருந்த கணினி மேஜை மற்றொரு மேஜையையும் சோதனை செய்ய, அங்கு அலுவலக கோப்புகளை தவிர பணம் ஏதும் இல்லை. பின்னர், ஹாலிற்கு இடது புறத்தில் இருந்த கண்ணாடியால் ஆன கேபின் உள்ளே சென்று, திருமதி.உமா மற்றும் செல்வி சௌந்தர்யா ஆகியோர்களை இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.விஜயலட்சுமி ஆகிய தாங்கள் மறைவிடத்திற்கு அழைத்து சென்று அவர்களிடம் பணம் ஏதும் இல்லை. பின்னர், திருமதி.உமா அவர்களின் ஹேண்ட்பேக்கை சோதனை செய்ய, அதில் எவ்வளவு பணம் உள்ளது என்று திருமதி.உமா அவர்களிடம் கேட்க, அவர் அதில் ரூ.4,000/- இருப்பதாகவும், அந்த பணம் தன்னுடைய மகன் வினோத் பெயரில் உள்ள TATA Altraz Regn.No.TN 73 AF 7872 காருக்கு பெட்ரோல் போட எடுத்து வந்த பணம் என்றும், அந்த காரை அருண் என்ற ஆக்டிங் டிரைவரை வைத்து தான் அலுவலகத்திற்கு எடுத்து வந்து செல்வதாகவும் சொன்னார். பின்னர், அந்த பணத்தை எண்ணிப்பார்க்க, அதில் ரூ.19,500/- (39 Nos x Rs.500/-) இருந்தது. பின்னர், அவரை மீண்டும் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கேட்க, அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற இயலாததால், அந்த பணம் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், திருமதி.உமா அவர்களின் நீல நிற லன்ச் பேக்கை சோதனை செய்ய, அதன் சைடு ஜிப்பில் பணம் இருந்தது. அந்த பணம் குறித்து திருமதி.உமா அவர்களிடம் கேட்க, அந்த பணம் அவருடைய அன்றாட செலவிற்காக எடுத்து வந்த பணம் என்றும், அதில் ரூ.1000/- இருப்பதாகவும் சொன்னார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் ரூ.1,300/- இருந்தது. அந்த பணம் அவரிடமே திருப்பி தரப்பட்டது. பின்னர், அந்த கேபினில் இருந்த திருமதி.உமா அவர்களின் மேஜை சோதனை செய்யப்பட்டது. பின்னர், அந்த கேபினில் கிழக்கு திசை நோக்கியவாறு இருந்த இருக்கை குறித்து விசாரிக்க, திருமதி.உமா அவர்கள் அந்த இருக்கை இளநிலை பொறியாளர் திரு.விஷ்ணு அவர்களுடையது என்றும், தற்சமயம் அவர் அவருடைய மகனுக்கு திருமணம் என்பதால் ஈட்டிய விடுப்பில் சென்றுள்ளதாகவும் சொன்னார். பின்னர், மேற்படி உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களை திரேக சோதனை செய்து அவர்கள் வசம் இருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் மற்றும் உரிய விளக்கம் கூறியதால் அவர்கள் வசம் இருந்த தொகை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்ட விவரம் மற்றும் தக்க முகாந்திரம் கூறாததால் பணம் கைப்பற்றப்பட்ட விவரம் பின்வருமாறு:

| வ. எண் | ஒப்பந்ததாரர் விவரம் | தக்க முகாந்திரம் கூறியதால் திருப்பி கொடுக்கப்பட்ட பணம் | தக்க முகாந்திரம் கூறாததால் கைப்பற்றப்பட்ட பணம் |
|---|---|---|---|
| 1. | திரு.B.பழனி (48/2023) த/பெ பங்காரு, (திரு.அன்புமணி, அரக்கோணம் ஒன்றிய ஒப்பந்ததாரரின் சப்-காண்டிராக்டர்),<br>முகவரி: எண்.126, குழாய் தெரு, முள்வாய் கிராமம் மற்றும் அஞ்சல்,<br>அரக்கோணம் தாலுக்கா,<br>இராணிப்பேட்டை மாவட்டம்.<br>(மனைவி முள்வாய் ஊராட்சி மன்றத்தலைவர்),<br>கைபேசி எண்.8939470230<br>(மூன்று அளவு புத்தகங்களுடன் உதவி செயற்பொறியாளரை பார்க்க சொல்லி திரு.துரைபாபு, உதவி பொறியாளர், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் அனுப்பியதால் உதவி செயற்பொறியாளரை பார்க்க வந்தவர்) | சட்டையின் இடது வெளிப்புற பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.360/- | ... |
| 2. | திரு.P.சற்குணம் (40/2023) த/பெ பண்டரி, (அரக்கோணம் ஒன்றிய ஒப்பந்ததாரர்),<br>முகவரி: எண்.29, 3-வது தெரு, சிவசக்தி நகர், அரக்கோணம் தாலுக்கா,<br>இராணிப்பேட்டை மாவட்டம்.<br>கைபேசி எண்.9047877095<br>(ஒரு அளவு புத்தகத்துடன் உதவி செயற்பொறியாளரை பார்க்க சொல்லி திரு.துரைபாபு, உதவி பொறியாளர், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் அனுப்பியதால் உதவி செயற்பொறியாளரை பார்க்க வந்தவர்) | சட்டையின் இடது வெளிப்புற பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.370/- | பேன்ட்டின் வலது பக்க பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.15,500/- (31 Nos xRs.500) |

| | | | |
|---|---|---|---|
| 3. | திரு.C.தயாளன் (57/2023) த/பெ சின்னப்பா ரெட்டி, (அரக்கோணம் ஒன்றிய ஒப்பந்ததாரர் திரு.கோகுல்ராவ் என்பவரின் சப்-காண்டிராக்டர்), முகவரி: விநாயகர் கோவில் தெரு, வழி-ஞானமங்கலம், பெருங்களத்தூர், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் கைபேசி எண்.9443204677 (ஒரு அளவு புத்தகத்துடன் உதவி செயற்பொறியாளரை பார்க்க சொல்லி டார்லிங் சுஜா, இளநிலை பொறியாளர், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் அனுப்பியதால் உதவி செயற்பொறியாளரை பார்க்க வந்தவர்) | சட்டையின் இடது வெளிப்புற பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.500/- | பேண்ட்டின் வலது பக்க. பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.19,500/- (39 Nos xRs.500) |
| 4. | திரு.K.சிவராமன் (55/2023) த/பெ கிருஷ்டப்பரெட்டி, (சோளிங்கர் ஒன்றிய ஒப்பந்ததாரர் பூர்ணசந்திரன் என்பவரின் சப்-காண்டிராக்டர்), முகவரி: பஜனை கோவில் தெரு, வெங்குப்பட்டு கிராமம், சோளிங்கர் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் கைபேசி எண்.9787513635 (முன்னாள் வெங்குப்பட்டு ஊராட்சி மன்றத்தலைவர்) (ஒரு அளவு புத்தகத்துடன் உதவி செயற்பொறியாளரை பார்க்க சொல்லி டார்லிங் சுஜா, இளநிலை பொறியாளர், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் அனுப்பியதால் உதவி செயற்பொறியாளரை பார்க்க வந்தவர்) | சட்டையின் இடது வெளிப்புற பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.710/- | Underwear-ன் வலது பக்க பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.12,000/- (25 Nos xRs.200= Rs.5,000/- & 14 Nos x Rs.500= Rs.7,000/-) |
| | வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் | | ரூ.47,000/- |

பின்னர், உதவி செயற்பொறியாளரின் அலுவலக அறைக்கு சென்று, அங்கு கழிவறையை ஒட்டினாற்போல் இருந்த மர பீரோவை சோதனை செய்ய, அதில் முதல் அடுக்கில் ஒரு வேலை செய்யாத லேப்டாப் இருந்தது. மேலும் அந்த அடுக்கின் இடது பக்கத்தில் புத்தகங்களுக்கு இடையில் இரண்டு ரப்பர் பேண்டுகளால் உருளையாக சுற்றப்பட்ட பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. முதல் ரப்பர் பேண்டு போடப்பட்ட பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் ரூ.9,500/- (19 Nos. X

Rs.500/-) இருந்தது. மற்றொரு ரப்பர் பேண்டு போடப்பட்ட பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் ரூ.30,000/- (60 Nos. X Rs.500/-) இருந்தது. மேலும், அந்த முதல் அடுக்கின் வலது பக்கத்தில் புத்தகங்களுக்கு இடையில் ரப்பர் பேண்ட் சுற்றப்பட்ட பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.38,000/- (76 Nos. X Rs.500/-) இருந்தது. மேற்படி பணம் ரூ.9,500/-, ரூ.30,000/- மற்றும் ரூ.38,000/-, ஆக மொத்தம் ரூ.77,500/- குறித்து, திருமதி.உமா அவர்களிடம் விசாரிக்க, அவர் அதில் இரண்டு ரப்பர் பேண்டுகளில் சுற்றப்பட்டிருந்த பணம் ரூ.30,000/- ஆனது இன்று காலை திரு.அன்புமணி, அரக்கோணம் ஒன்றிய ஒப்பந்ததாரரின் சப்-காண்டிராக்டர் திரு.பழனி என்பவர் உதவி செயற்பொறியாளர் திரு.ஹரிகிருஷ்ணன் அவர்களுக்கு கொடுத்த பணம் என்று சொன்னார். மீதம் உள்ள ரூ.38,000/-ஐ பற்றியும், தனக்கு ரூ.9,500/- பற்றியும் தெரியாது என்று சொன்னார். அதனால், திருமதி.உமா அவர்களை உதவி செயற்பொறியாளர் திரு.ஹரிகிருஷ்ணன் அவர்களுக்கு நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை நடைபெற்று வருவதாகவும், அவரை உடனே நெமிலியில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலவலகத்திற்கு வரும்படி தகவல் தெரிவிக்க சொன்னதின் பேரில், அவரும் அவருடைய கைபேசியில் உதவி செயற்பொறியாளரை தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தார். அப்போது அவர் தான் செங்கல்பட்டிற்கு சென்று கொண்டிருப்பதாகவும், அதனால் தன்னால் வர இயலாது என்று சொன்னாரென திருமதி.உமா அவர்கள் தெரிவித்தார். பின்னர், மாவட்ட ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் திரு.முனுசாமி அவர்களை தொடர்பு கொண்டு நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை நடைபெற்று வருவதாகவும், அதனால் நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.ஹரிகிருஷ்ணன் அவர்களை நெமிலிக்கு செல்லும்படி தகவல் தெரிவிக்கும்படி சொல்லப்பட்டது. பின்னர், திரு.முனுசாமி, செயற்பொறியாளர் அவர்கள் தொடர்பு கொண்டு மேற்படி உதவி செயற்பொறியாளர் திரு.ஹரிகிருஷ்ணன் அவர்களை அவருடைய கைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் எடுக்கவில்லை என தெரிவித்தார். பின்னர், உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் உள்ள குளியலறையுடன் கூடிய கழிவறையை சோதனை செய்ய அதில் வழக்கு சம்மந்தமான ஆவணங்களோ, பணமோ இல்லை. பின்னர், அறையின் தென்மேற்கு மூலையில் இருந்த ஸ்டீல் பீரோவை சோதனை செய்ய, அளவு புத்தகங்களும், அலுவலக பதிவேடுகளும், அளவுக்கருவிகளும் இருந்தன. பின்னர், உதவி செயற்பொறியாளரின் டைனிங் டேபிள் மேல் இருந்த பதிவேடுகளை சோதனை செய்ததில் பணம் ஏதும் இல்லை. அந்த ஸ்டீல் டேபிளின் உள்ள அலமாரியை சோதனை செய்ய அதில் பயன்படாத தாள்கள் இருந்தன. பின்னர், உதவி செயற்பொறியாளர் திரு.ஹரிகிருஷ்ணன் அவர்களின் அலுவலக மேஜையை சோதனை செய்ய, அதன் மீது அலுவலக கோப்புகள் இருந்தன. பின்னர், மேஜையின் இடது மற்றும் வலது புறத்தில் இருந்த இழுவறைகளை சோதனை செய்ய, அதில் பயன்படாத பழைய பதிவேடுகள் மற்றும் தாள்கள் இருந்தன. பின்னர், உதவி

செயற்பொறியாளர் அலவலகத்திற்கு வெளியில் நிறுத்தப்பட்டிருந்த திருமதி.உமா அவர்களின் காரில் சோதனை செய்ய சென்றபோது, அந்த காரில் உட்கார்ந்திருந்த நபரிடம் தகவலை தெரிவித்து அவரை பற்றி விசாரிக்க, அவர் அருண் குமார் எனவும், தான் திருமதி.உமா அவர்களின் ஆக்டிங் டிரைவர் என்றும் சொன்னார். பின்னர், அவரை திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ஏதும் இல்லை. பின்னர், திருமதி.உமா அவர்களின் காரை சோதனை செய்ய அதில் பணம் எதுவும் இல்லை. பின்னர், திருமதி.உமா அவர்களிடம் ஊரக வளர்ச்சி நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலக பணியாளர்களின் வருகைப்பதிவேடு, பில் ரிஜிஸ்டர் மற்றும் அதனுடன் பில் பார்மின் நகல்களையும் ஆஜர் செய்தார். மேற்படி அவற்றின் முதல் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த இறுதி பக்கங்களிலும் நானும், காவல் ஆய்வாளராகிய தாங்களும் மற்றும் திருமதி.உமா, இளநிலை வரைத்தொழில் அலுவலர் ஆகியோர் கையொப்பம் செய்து (ஆவண எண்.1 & ஆவண எண்.2) வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், திருமதி.உமா அவர்களிடம் ஒப்பந்ததாரர்கள் நேரிடையாக அளவு புத்தகங்களை எடுத்து வந்து கொடுக்கலாமா என்று கேட்டதற்கு, அவர் அந்த அளவு புத்தகங்களை சம்மந்தப்பட்ட உதவி / இளநிலை பொறியாளர்தான் எடுத்து வந்து உதவி செயற்பொறியாளரிடம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். பின்னர், திருமதி.உமா அவர்களிடம் இன்று ஒப்பந்ததாரர்கள் அளித்த அளவு புத்தகங்களை கேட்க, அவர் கீழ்கண்ட அளவு புத்தகங்களை ஆஜர் செய்தார். அந்த அளவு புத்தகங்களில் பில் பார்மும் இருந்தது. அந்த அளவு புத்தகங்களின் முதல் மற்றும் பதிவு மேற்கொள்ளப்பட்டிருந்த இறுதி பக்கங்களிலும் நானும், காவல் ஆய்வாளராகிய தாங்களும், திருமதி.உமா, இளநிலை வரைத்தொழில் அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் / ஒப்பந்ததாரரின் சப்-காண்டிராக்டர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது.

| Doc.No. | M.Book No. | Details of M.Book |
|---|---|---|
| 3. | 79/2023-24 | Construction at CC Check Dam Rappri Kalvai Near Ramdass Farmer Field, Mulvai Village |
| 4. | 86/2023-24 | Construction at CC Check Dam Muppathamman koil Odai, near Durairaj Farmer Field, Mulvai Village |
| 5. | 78/2023-24 | Construction at CC Check Dam Reddikulam kalvai near Vibushan Farmer Field, Mulvai Village |
| 6. | Not assigned | Construction of two class room Building at PUE School Mittapalayam in Anaipakkam Panchayat |
| 7. | 481/2023-2024 (2 M.Books – 1st Book) | Construction of two class room Building at PUE School at Kunnathur Colony in Kunnathur Panchayat |
| 8. | 481/2023-2024 (2 M.Books – 2nd Book) | Construction of two class room Building at PUE School at Kunnathur Colony in Kunnathur Panchayat |
| 9. | 496/2022-2023 | Repairs to the RCC Two class room School Building Karikkanthangal Village h/o Vengupattu Panchayat |
| 10. | 35/2022-2023 | Construction of two class room Building at PUE School at Kilveethi Panchyat |

| | | |
|---|---|---|
| 11. | Not assigned | Providing CC pavement (wearing coat) at Rendadi Village H/o Karikkal Panchayat |
| 12. | Not assigned | Construction of 60000 .ltr OHT Avatham Kil Colony H/o Anvarthikan Panchayat |
| 13. | 442/2022-2023 | Construction of food Grain Godown (Model II) at Edayanthangal Village in Vangur Panchayat |

பின்னர், திருமதி.உமா அவர்களிடம் நேற்று 20.12.2023 மற்றும் இன்று 21.12.2023 காலை ஒப்பந்ததாரர்கள் அளித்த அளவு புத்தகங்களை கேட்க, அவர் கீழ்கண்ட அளவு புத்தகங்களை ஆஜர் செய்தார். அந்த அளவு புத்தகங்களில் பில் பார்மும் இருந்தது. அந்த அளவு புத்தகங்களின் முதல் மற்றும் பதிவு மேற்கொள்ளப்பட்டிருந்த இறுதி பக்கங்களிலும் நானும், காவல் ஆய்வாளராகிய தாங்களும், மற்றும் திருமதி.உமா, இளநிலை வரைத்தொழில் அலுவலர் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது.

| Doc. No. | M.Book No. | Details of M.Book |
|---|---|---|
| 14. | 374/2023-2024 | Construction of 60000 .ltr OHT (12 MM Stagging height) at Melkalathur Panchayat |
| 15. | 348/2023-2024 | Construction of 60000 .ltr OHT (12 MM Stagging height) at Pallur Panchayat |
| 16. | 428/2022-2023 | Construction of PUE School Building at sayanapuram Panchayat |
| 17. | 25/2023-2024 | Renovation of Vannangulam including Baby pond , Bhathing Ghat, Inlet & Outlet at Thalangai Panchayat |
| 18. | 17/2023-2024 | Renovation of Vannangulam including Baby pond , Bhathing Ghat, Inlet & Outlet at Thalangai Panchayat |
| 19. | Not assigned | Construction of Compound wall at PUM School seyyur in Seyyur Panchayat |
| 20. | 11/2023-2024 | Providing PVC Pipe line at Near Pump Room to OHT H/o Kunnathur Panchayat |
| 21. | 495/2023-2024 | Construction of Culvert at Uthirampattu Village H/o Uthirampattu Panchayat |
| 22. | 493/2023-2024 | Construction of CC Check Dam at Veeraragavapuram Channel at Koothampakkam Panchayat |
| 23. | 492/2023-2024 | Construction of CC Check Dam at Veeraragavapuram Eri Channel at Koothampakkam Panchayat |
| 24. | 494/2023-2024 | Construction of CC Check Dam at Velvadi Kalvai in Koothampakkam Panchayat |
| 25. | | Construction of new Toilet Girls in PUE School at Kallalankuppam Panchayat |

மேலும், மேற்படி அரசு அலுவலகமான ஊரக வளர்ச்சி நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இலஞ்சம் கொடுப்பதும் குற்றம், இலஞ்சம் வாங்குவதும் குற்றம் என்ற தகவல் பலகை ஏதும் வைக்கப்படவில்லை. இந்த இருதுறை

திடீர் சோதனையில், உரிமை கோராத பணம் ரூ.1,44,000/- (278 Nos X Rs.500/-= Rs.1,39,000/- & 25 Nos X Rs.200/-=Rs.5,000/-) மற்றும் ஆவணங்களும் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டன. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, இன்று 22.12.2023 ஆம் தேதி 02.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டுசோதனையில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் அனைத்தும் இருதுறை திடீர் கூட்டுசோதனை செயல்முறை தயார் செய்து, அதில் நானும், இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய தாங்களும், திருமதி.உமா, இளநிலை வரைவுத்தொழில் அலுவலர் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகியோர் கையொப்பம் செய்து, திருமதி.உமா, இளநிலை வரைவுத்தொழில் அலுவலர் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு அதன் நகல் வழங்கப்பட்டு அவர்களின் ஒப்புகை பெறப்பட்டது. இந்த இருதுறை திடீர் கூட்டு சோதனையின்போது, மேற்படி ஊரக வளர்ச்சி நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கும், ஆவணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், மேற்படி இருதுறை திடீர்சோதனையின்போது, ஆஜரில் இருந்த அனைவருக்கும் இரவு உணவு வாங்கி தரப்பட்டது. மேலும், ஊரக வளர்ச்சி நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலக அலுவலர்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் எவ்விதமான துன்புறுத்தலும் ஏற்படுத்தப்படவில்லை. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையில் இன்று 22.12.2023 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் ஆஜராகி, ஊரக வளர்ச்சி நெமிலி உபகோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் கூட்டு சோதனை மேற்கொண்டதில் கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் கூற இயலாத லஞ்சப்பணம் ரூ.1,44,000/- (278 Nos X Rs.500/- = Rs.1,39,000/- & 25 Nos X Rs.200/- = Rs.5,000/-), ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டுசோதனை செயல்முறை ஆகியவற்றை நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். எனவே, ஒப்பந்தப்பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்து, மேலளவீடு செய்தும், அவர்கள் அளித்துள்ள அளவீட்டு புத்தகங்களை சரி பார்த்தும் கையொப்பம் இட வேண்டிய திரு.ஹரிகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சி, நெமிலி உபகோட்டம் அவர்கள் தன்னுடைய பதவியை துஷ்பிரயோகம் செய்து, தனக்கு கீழ் பணிபுரியும் திருமதி.உமா என்பவர் மூலம் தனக்காகவும், திருமதி.உமா அவர்களுக்காகவும் ஒப்பந்ததாரர்களை கட்டாயப்படுத்தி லஞ்சமாக பணம் வசூல் செய்ததாக கருதப்படும் பணம் ஆகிய ரூ.97,000/-மும் ஒப்பந்ததாரர்கள் லஞ்சமாக பணம் கொடுத்து தாங்கள் செய்த ஒப்பந்த பணிகளுக்கு மேலளவீட்டு கையொப்பம் பெற எடுத்து வந்த

பணம் ரு.47,000/-மும் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. எனவே, திரு.ஹரிகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சி, நெமிலி உபகோட்டம், திருமதி.உமா, இளநிலை வரைத்தொழில் அலுவலர், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், நெமிலி உபகோட்டம் மற்றும் ஒப்பந்ததாரர்களாகிய திரு. B.பழனி, த/பெ பங்காரு, எண்.126, குழாய் தெரு, முள்வாய் கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம், திரு. P.சற்குணம் த/பெ பண்டரி, எண்.29, 3-வது தெரு, சிவசக்தி நகர், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம், திரு. C.தயாளன், த/பெ சின்னப்பா ரெட்டி, விநாயகர் கோவில் தெரு, பெருங்களத்தூர், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் மற்றும் திரு. K.சிவராமன், த/பெ கிருஷ்டப்பரெட்டி, பஜனை கோவில் தெரு, வெங்குப்பட்டு கிராமம், சோளிங்கர் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் ஆகியோர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம்/- xxxxxxxxx (V.சரவணமுத்து), துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Sir,

Received the complaint on 22/12/2023 at 07.00 hrs and registered a case in Ranipet Vigilance & Anti-Corruption Cr.No.03/2023, u/s 7 & 12 of Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sd/-XXXXXX (S.Vijayalakshmi), Ins/V&AC/Ranipet.

The FIR in original along with the complaint, Joint Surprise Check Proceedings in original sent to Hon'ble Chief Judicial Magistrate / Special Judge, Vellore and other copies to the officers concerned.

S.Vijayalakshmi
22/12/23

*Inspector of Police*
Vigilance & Anti-Corruption
Ranipet.